# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:– முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

| | | | |
|---|---|---|---|
| வா.சா. | 3 | நாள் : 26.03.2026 | |
| அசல் வழக்கு எண். | 37/2023 | | |
| பெயர் | முகமது கபீர் | த/பெ | |
| வயது | | தொழில் | |
| கிராமம் | | தாலூக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**வாதி தரப்பில் முதல் விசாரணை:**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியமளிக்க சம்மன் வாதி மூலமாக சார்வு செய்யப்பட்டு ஆஜராகியுள்ளேன். நான் பொறையாரில் உணவகம் வைத்து தொழில் நடத்திவந்தேன். தற்போது வயது முதிர்வு காரணமாக ஓய்வாக இருக்கிறேன். நான் பொறையார் மொய்தீன் மரைக்காயர் தெருவில் வசித்து வருகிறேன். வாதியை எனக்கு தெரியும். அவர் வீடும் அதே தெருவில் தான் உள்ளது. வாதியின் வீட்டிற்கு எதிரில் ஒரு தோட்டம் உள்ளது. எனக்கு தெரிந்து அந்த தோட்டத்தின் நான்கு புறமும் காம்பவுண்ட் சுவர் உள்ளது. வாதியின் வீடு மேற்கு பார்த்தது அதற்கு எதிர் புறம் தோட்டம் உள்ளது. அந்த தோட்டம் வாதியின் அப்பா வசம் இருந்தது தற்போது சுமார் 50, 55 வருடமாக வாதியின் வசம் உள்ளது.

**நான்காம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தோட்டத்தில் ஷெட் போட்டு ஒரு கட்டிடம் உள்ளது. அதை தவிர பனைமரங்கள் உள்ளன. சுற்று சுவர் கட்டியது எனக்கு தெரியும். அதை வாதி தான் கட்டினார். அது பூட்டு திறப்பில் உள்ளது. வாதி எதற்கான வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. சம்மன் வந்த பிறகு நான் வாதியை பார்த்தேன். ஆனால் அவரிடம் நான் இது சம்பந்தமாக எதுவும் கேட்கவில்லை. வாதியின் அப்பா பெயர் நூருதின் மரைக்காயர். அவரின் அப்பா பெயர் எனக்கு

தெரியாது.  அவரின் குடும்ப உறுப்பினர்கள் எனக்கு தெரிந்து யாரும் அங்கு கிராமத்தில் இல்லை. நான்காம் பிரதிவாதியை எனக்கு தெரியாது. நான் வாதிக்கு சாதகம் செய்யவேண்டுமென்று தவறான தகவலை சாட்சியமாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.